உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27 ] கீலக - சித்திரை - 10—5—68 [ இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ ;
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## சிவம்பெருக்கும் சித்திரை

பகலும், இரவும் கூடிய நாளினை, 'கிழமை, பக்கம், திங்கள், யாண்டு' எனத் தொகுத்துக் கணக்கிடும் முறை எல்லா நாட்டிலும், எல்லா மக்களிடத்திலும் காணப்படுகின்றது. எனினும், யாண்டு அல்லது வருடத்தின் தொடக்கத்தை அனைவரும் ஒருகாலத்திலே கொள்ளாமல் வேறு வேறு காலங்களில் கொள்கின்றனர். அதுபற்றி ஒவ்வோர் இனத்தார்க்கும் ஒவ்வோர் யாண்டு தனியாக இருப்பதுபோல வைத்து, 'தமிழ் வருடம், தெலுங்கு வருடம், ஆங்கில வருடம்' என்பது முதலாகப் பல வருடங்கள் சொல்லப்படுகின்றன. தொன்று தொட்டு வரும் மரபின்படி இயற்கையில் அமைந்த இவ்வகை

வருடங்கள் போக, இக்காலத்தில் உலகியல் முறைகளை நடத்து தற்கு வாய்ப்பாக, 'கல்வி யாண்டு, நிதியாண்டு' என்பன போலச் செயற்கையாக அமைத்துக்கொள்ளும் வருடங்கள் பல சொல்லப்படுகின்றன. மற்றும், 'திருவள்ளுவர் யாண்டு, மெய்கண்டான் யாண்டு, கிறித்து யாண்டு' என்றாற்போலப் பெரியோர்கள் தொடர்பாகச் சொல்லப்படும் யாண்டுகளும், மற்றும் எத்தனையோ வகையான யாண்டுகளும் சொல்லப்படு கின்றன. இவைகளில் தமிழ் மக்களுக்கு உரிய யாண்டு, 'தமிழ் வருடம்' எனச் சொல்லப்படுகின்றது.

'தமிழ்வருடத்தின் தொடக்கம் பழையகாலத்தில் ஆவணித் திங்களாய் இருந்தது' என அறிஞர் கூறுவர். அதற்குக் காரணம் பண்டைத் தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்துள் ஓர் யாண்டின் பகுதியாகிய காலவேறுபாடுகளை முறைப்படுத்துக் கூறுமிடத்தில், ஆவணியில் தொடங்குகின்ற கார்காலத்தை முதலிற் கூறியிருப்பதும் அதற்கு விளக்கம் கூறுமிடத்தில் நச்சினார்க்கினியர், "கால உரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்க ஓரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடக ஓரை ஈறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாகலின்" என உரைத் திருப்பதுமாகும். 'ஆவணி மாதம், வருடத்தின் முதல்மாத மாகக் கொள்ளப்பட்டதற்குக் காரணம், பன்னிரண்டு இராசி களுள் சூரியன் தனக்குரிய சிங்க ராசியில் இருக்கும் மாதம் ஆவணிமாதமே என்பதுதான்' என்பதே நச்சினார்க்கினியர் தரும் விளக்கம். இவ்வாறிருப்பினும் இப்பொழுது தமிழ் வருடத்தின் தொடக்கம் சித்திரைத் திங்களாகவே கொள்ளப் படுகின்றது என்பதும், இம்முறை எப்பொழுது தொடங்கியது என்று சொல்ல இயலாத அத்துணை நெடுங்காலமாக இருந்து வருகின்றது என்பதும் யாவரும் நன்கறிந்தவை. இவ் வாறே இருபத்தேழு நட்சத்திரங்களுள் அசுவினி நட்சத்திரமே இப்பொழுது முதல் நட்சத்திரமாகச் சொல்லப்படினும், சூரிய னுக்கு உரியதாகிய கார்த்திகை நட்சத்திரமே முற்காலத்தில் முதல் நட்சத்திரமாகக் கொள்ளப்பட்டிருந்தது எனக் கூறுதல் உண்டு. நாண்மீன், கோண்மீன் முதலியவற்றின் இயக்கங் களில் இடையறாது நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்களை ஒட்டி இப்படிப்பட்ட மாற்றங்களை ஆன்றோர் அவ்வப்பொழுது செய்கின்றனர் என்பர். அஃது எவ்வாறாயினும் சித்திரைத் திங்களைத் தொடக்கமாகக் கொண்ட யாண்டு சிறப்பாகச் சைவ

சமயிகட்கு உரிய யாண்டாக விளங்குகின்றது. காரணம், இறைவன் திருவருளாலே தமிழ் நாட்டில் திருவவதாரம் செய்து எங்கும் சிவம்பெருக்கிய பேரருளாசிரியர்களோடு இச்சித்திரைத் திங்கள் பெரிதும் தொடர்புற்று நிற்பதேயாம்.

வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத் துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும் நல் ஊழி தொறும் தவம் பெருக்கும் சண்பையிலே தாவில் சராசரங்களெலாம் சிவம் பெருக்கும் ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்ததும், பின்னர் மூவாண்டிலே இறைவியோடு இறைவன் எழுந்தருளி வந்து ஞானப்பால் தர உண்டு தாவில் தனிச் சிவஞான சம்பந்தராய், உள்நிறைந்து பொழிந்தெழுந்த உயர் ஞானத் திருமொழியால் திருப்பதிகம் அருளிச்செய்யத் தொடங்கியதும் சித்திரைத் திருவாதிரைநாளே. இதனைத் திருவுள்ளத்திற் கொண்டு, அளவிலாத பெருமையராகிய அளவிலா அடியார்களது புகழைக் கூறும் தமது திருத்தொண்டர் புராண அரங்கேற்றத்தைச் சேக்கிழார் அநபாயச் சோழன் முதல் அனைவரும் கூடிய பேரவையில் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் ஒரு சித்திரைத் திருவாதிரையில் தொடங்கி, அடுத்த சித்திரைத் திருவாதிரையில் முடித்தருளினர். அதனால், மன்றுளார் அடியார்அவர் வான்புகழ் உலகெங்கும் நின்று நிலவுதற்குக் காரணமாய் இருந்தது சித்திரைத் திருவாதிரையேயாகின்றது.

இம்மட்டோ! அலகில் கலைத்துறை தழைக்கவும், அருந்தவத்தோர் நெறிவாழவும், உலகில்வரும் இருள் நீக்கி ஒளி விளங்கு கதிர்போல் திருவவதாரம் செய்து, மார்பாரப் பொழி கண்ணீர் மழைவாரும் திருவடிவும், மதுர வாக்கில் சேர்வாகும் திருவாயில் தீந்தமிழின் மாலைகளும், செம்பொற்றாளே சார்வாகும் திருமனமும், உழவாரத் திருப்படையுந் தாமுமாகிப் பார்வாழப் பணிசெய்து, பல்லவனைச் சைவனாக்கிப் பதிகம் ஏழெழுநூறு பகர்ந்து, இமயமுதற் குமரிவரையும் எங்கும் சென்று சிவமணம் கமழச் செய்து ஐயாற்றிற் கயிலை கண்டு அருள்நெறி நின்ற அப்பர், "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" என்று, பூம்புகலூர் மேவிய புண்ணியனது திருவடி நிழலிலே நண்ணரிய சிவானந்தஞானவடிவேயாகி அடைந்ததும் சித்திரைச் சதயநாளே. இவைகளால் சித்திரைத் திங்கள் சிவநெறியாளர்க்கெல்லாம் சிவம்பெருக்கும் சித்திரையாய்

விளங்குதல் தெளிவு அதனால், இச்சித்திரைத் திங்களிலே தங்கள் யாண்டு தொடக்கமாவதுதான் சைவ சமயிகட்கு மிக மிகப் பொருத்தமானதாகும்.

இம் முறையில் ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் சீகாழித் திருத்தலத்தில் திருமுலைப்பால் விழாச் சிறப்பாக நடை பெறுவதும், திருவதிகை, திருப்புகலூர் முதலிய பல இடங் களிலும் திருநாவுக்கரசர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப் பெறுவதும் யாவரும் அறிந்தவை. எனினும், இவ்வாண்டில் இவ்விருநாட்களிலும் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பு நிகழ்ச்சிகள் பல அன்பர் உள்ளங்களை ஆனந்தபரவசத்தில் ஆழச் செய்தன.

சீகாழித் திருமுலைப்பால் விழாவில் எங்கள் தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் வழக்கம் போல் எழுந்தருளி, ஞானசம்பந்தர் சிவிகை யுலாவில் அற்புத விளக்கச் சொற்பொழிவுகளைத் தங்கள் அருளாசியுடன் தொடங்கிவைத்து உடன் இருந்து நடாத்தியது, திருமுலைப்பால் நிவேதனங்களை அருகில் இருந்து செய்வித்து அன்பர்களுக்கு வழங்கியருளியது முதலிய அனைத்து நிகழ்ச்சிகளையும் திருச்சி வானொலி நிலையத்தார் தங்கள் வானொலியில் அனைவரும் கேட்டு அகக் கண்ணால் கண்டு பயன் பெறும் வண்ணம், ஒலிபரப்பியது இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க ஒன்று.

திருநாவுக்கரசர் திருவவதாரம் செய்த திருத்தலமாகிய, சைவநெறி தலம் ஏழும் பாலிக்குந் தகைமையினால் தெய்வநெறிச் சிவம்பெருக்கும் திருவாமூரில் அவர் திருவவதாரம் செய்த திருமனையில் சில ஆண்டுகட்கு முன்பு பல பேரன்பர்களது பொருளுதவியைக்கொண்டு புதுவதாக அமைத்துக் குடமுழுக்குச் செய்வித்து, மாதச் சதயமும், ஆண்டுச் சதயமும் கொண் டாடப்பட்டு வருகின்ற திருநாவுக்கரசர் ஆலயத்தில் இவ்வாண்டு சித்திரைச் சதயம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. பல இடங்களிலும் இருந்து திருநாவுக்கரசர் திருவுருவப் படத் துடன் வந்த எண்பத்தோர் உந்துவண்டிகள் திருநாவுக்கரசரது ஊர்வலமாகவே காட்சியளித்தன. மூன்று நாட்களில் சிவ பூசகர் மாநாடும், அறிஞர்களது கருத்தரங்கு கவியரங்கு சொற் பொழிவுகளும், பண்ணிசை வாணர்களது பண்ணாராய்ச்சி

தேவார பாராயணங்களும், இசைவாணர்களது இசையரங்குகளும் கண்கொள்ளாக் காட்சியாய் விளங்கின. மூன்றும்நாள் இரவு திருவீதி உலாவிற்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளிச் சிறப்பித்தருளினர்கள். இவ்வகையிலெல்லாம் இவ்வாண்டுச் சித்திரை உண்மையிலேயே சிவம்பெருக்கும் சித்திரையாய் விளங்கிற்று.

மேலும், இவ்வாண்டில் சித்திரையிலேயே எங்கள் ஆதின ஆதிபரமாசாரிய மூர்த்திகள் குருபூஜை விழாவும் தொடங்குகின்றது. இதனை அடுத்து வர இருக்கும் திருஞானசம்பந்தரது திருநட்சத்திரத்திற்கும் இச்சித்திரைத் திங்கள் தோற்றுவாயாக அமைந்துள்ளது. இச் சிறப்பை எல்லாம் மக்கள் உன்னி உணர்ந்து சித்திரைத் திங்களை முதலாக உடைய ஆண்டு முழுவதையும் சிவனருள் யாண்டாகவே கொண்டு சிவநெறி நின்று, சிவனருள் வெள்ளத்தில் திளைப்பார்களாக.

---

## விசேஷ நாட்கள்

### 11—5—68 முதல் 10—6—68 முடிய

| | |
|---|---|
| 17—5—68 | தருமையில் ஆதிகுருஞானசம்பந்தர் குருபூஜை |
| 18—5—68 | பட்டணப்பிரவேசம் |
| 24—5—68 | பிரதோஷம் |
| 25—5—68 | கழற்சிங்கநாயனர் திருநட்சத்திரம் |
| 26—5—68 | வேளூர் கிருத்திகை |
| 30—5—68 | நம்பியாண்டார்நம்பிகள் திருநட்சத்திரம் |
| 30—5—68 | நமிநந்தி அடிகள் ,, |
| 31—5—68 | சேக்கிழார் நாயனர் ,, |
| 2—6—68 | சோமாசிமாறநாயனர் ,, |
| 5—6—68 | 24-ஆவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை |
| 8—6—68 | பிரதோஷம் |

குருபாதம்

## குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

## "வாலறிவன்"

தனக்கு முன்னே ஒரு பொருள் இல்லாது, தானே எல்லாப் பொருள்கட்கும் முன்னே உள்ளவன் இறைவன் என்பதற்கு அவனை, "ஆதிபகவன்" எனத் தமது அறநூலில் குறித்த திருவள்ளுவர், பின்பு அவனை, "வாலறிவன்" எனக் குறிப்பிட்டார். வான்மை - தூய்மை; பிறிதொரு பொருளோடு கலப்பற்றது. எனவே, "வாலறிவன்" என்றது, 'பிறிது யாதொரு பொருளோடும் கலப்பற்ற தூய அறிவினையுடையவன் இறைவன்' என்றதாயிற்று.

வான்மைக்கு எதிர்ப்பதம், வாலாமை; அஃதாவது மாசு. உயிர்களுக்கும் அறிவு உண்டு என்றாலும், அஃது இறைவனுடைய அறிவுபோல மாசற்றுத் தூயதாய் இல்லாமல், மாசுடையதாய் இருக்கின்றது. இம்மாசுதான், 'மலம்' எனக் கூறப்பட்டுகின்றது. 'மலம், மாசு, அழுக்கு' என்பன ஒருபொருட் சொற்கள். உயிர்களின் அறிவில் படிந்துள்ள மாசு, அதைச் செயற்பட ஒட்டாமல் கட்டி நிற்றலின், அம் மாசினை, 'பாசம்' என்னும் பெயராற் குறிப்பிடுகின்றனர். பாசம் - கயிறு அல்லது தளை. எனவே, "வாலறிவன்" என்பது மலத்தொடர்பில்லாத - நின்மலமான அறிவை யுடையவன் என்பதாம்.

இறைவனுடைய அறிவும் உயிரினுடைய அறிவும், 'அறிவு' என்ற வகையில் ஒன்றேயாயினும், அவ்விரண்டும் இவ்வகையில் வேறுபடுகின்றன. அஃதாவது, இறைவனுடைய அறிவு பாசத்தாற் கட்டுப்படாதது; உயிரினுடைய அறிவு பாசத்தாற் கட்டப்பட்டது. 'அறிவு' என்ற வகையில் இரண்டும் ஒன்றேயாக, அவற்றுள் ஒன்று என்றும் மாசுபடாது தூயதாகவே இருக்க, மற்றொன்று மாசுபட்டுக்கிடப்பது ஏன் என்று ஆராய்ந்தால், 'அவ்விரண்டிற்கும் இயற்கையில் அடிப்படையில் சில வேற்று

மைகள் இருத்தல் வேண்டும்' என்பது புலனாகும். அவ்வேற்றுமைகளுள் முதலாவது, உயிரினது அறிவு எந்தப்பொருளைப் பற்றுகிறதோ அந்தப் பொருளில் அழுந்தி அதன் வண்ணமாகித் தன் தன்மையை இழந்து நிற்பது. இறைவனுடைய அறிவு அவ்வாறின்றி எந்தப் பொருளிலும் அழுந்தாது ஒட்டற்று நின்று தன்னியல்பிலே நிற்பது. இதனால் உயிரினது அறிவு பாசத்தால் எளிதில் மறைக்கப்படுகின்றது; இறைவனது அறிவு ஒருகாலும் பாசத்தால் மறைக்கப்படுவது இல்லை. எனவே, "வாலறிவன்" என்ற இதனாலேயே, 'இறைவன் யாதொரு பொருளையும் அதன்கண் அழுந்தாது நின்றே அறிபவன்' என்பதும் பெறப்படுகின்றது. ஒரு பொருளில் அழுந்தி அதன் வண்மையாய் நிற்பதுதான் 'அநுபவம்' என்று சொல்லப்படுகின்றது. அதனால், 'இறைவன் எல்லாப் பொருளையும் அறிபவனாயினும், ஒன்றையும் அநுபவிப்பவன் அல்லன்' என்பது விளங்கும்.

அறிவுக்கு இயற்கை ஒரு பொருளை அறிந்து நிற்றல். அவ்வறிவு பாசத்தால் தடுக்கப்பட்டுவிடுமாயின், பின்பு என்னாகும்? அறிவு, அறியாமையாய்விடும். அறிவு அறியாமையாய்விட்டால், பின்னர் அவ்வறியாமைநீங்கி, அறிவாவது எப்படி? வேறொருவர், அறியாமையை நீக்கி அறிவை உண்டாக்கவேண்டும். உயிர்கள் அனைத்தும் ஓரினமேயாகையால், 'அவற்றுள் சிலவற்றின் அறிவைமட்டும் பாசம் மறைக்கும்; சிலவற்றின் அறிவைப் பாசம் மறைக்காது' என்பதற்குக் காரணம் இல்லை. காரணம் இல்லாமல், ஒரு பொருளை வலியுறுத்த இயலாது. ஆகையால், எல்லா உயிர்களின் அறிவும் பாசத்தால் மறைக்கப்பட்டனவேயாதலின், அவற்றுள் ஓர் உயிர், மற்றோர் உயிருக்கு அறியாமையை நீக்கி, அறிவை உண்டாக்குதல் இயலாது. எனவே, 'என்றும் பாசத்தால் மறைக்கப்படாத அறிவினையுடைய இறைவனே, உயிர்கட்கு அறியாமையை நீக்கி அறிவை உண்டாக்குவான்' என்பது தெளிவு.

இறைவன் உயிர்கட்கு அறியாமையை நீக்கி, அறிவைத் தரும் முறைகள் பல, அவற்றுள், மக்கட் பிறப்பில் அவைகட்கு அவன் நூல்கள் வாயிலாக அறியாமையைப் போக்கி அறிவைத் தரும்முறை சிறந்த ஒன்று. நூல்களாவன, முன் அறிந்திராத பொருளை அறிவிப்பன. ஆகவே, அத்தகைய நூலை முதன்முதற் செய்து கொடுப்பவன் யார்? உயிர்கள், முற்கூறியவாறு அறியாமையில் அழுந்திக் கிடப்பவையாதலால், அவை

கள் எவ்வாறு ஒரு சிறந்த நூலை முதற்கண் செய்ய முடியும்? முடியாது. ஆதலின், முதல்முதல் நூலைச் செய்து தருபவன் முன்னர்க் குறிப்பிட்ட ஆதிபகவனாகிய இறைவனே. இதனை,

> " வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதனூ லாகும் "

என இலக்கணக்காரர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். ஆகவே, 'நூல்கள் வாயிலாக உயிர்கட்கு அறிவைத் தருபவன் இறைவனே' என்பது இனிது விளங்குகின்றது. இறைவனுக்குப் பாசம் இல்லாமையால் அறியாமையும் இல்லை. அறியாமை இல்லையாகவே, 'உயிர்கட்கு இறைவன் அறிவைத் தருவது போல, இறைவனுக்கு யார் அறிவைத் தருகின்றார்கள்' என்ற கேள்விக்கே இடம் இல்லை. அதனால், 'இறைவன் இயற்கையாகத் தானே அறியும் அறிவை யுடையவன்' என்பதும், 'உயிர்கள் அவ்வாறின்றி, ஒருவர் அறிவிக்க அறியும் அறிவை யுடையன' என்பதும் தெளிவாகும். இவற்றை விளக்கவே திருவள்ளுவர், 'வாலறிவன்' எனக் கூறும் குறளில், " கற்றதனால் ஆய பயன்என்கொல்" எனக் கல்வியை எடுத்துக் கூறினார். அதனால், 'உயிர்களின் அறிவு, கல்வி முதலிய துணைகளினாலேயே விளக்கம் பெறுவது' என்பதும் 'இறைவன் அறிவு அவ்வாறின்றித் தானே விளங்குவது' என்பதும் அக்குறளில் உய்த்துணர்ந்துகொள்ளக் கிடக்கின்றன. தானே விளங்குவதைத்தான், சமய நூல்கள், 'சுவயம் பிரகாசம்' என்கின்றன.

இன்னும், அறிவுகள் தாமே விளங்குவதும், அவ்வாறின்றிப் பிறிதொரு துணைபெற்று விளங்குவதும் ஆகிய தன்மைகள், அவற்றிற்குப் பாசம் இல்லாமையும், பாசம் உடைமையும் என்ற அவற்றால் மட்டும் ஆவன அல்ல. இயற்கையிலே அத்தன்மை அவைகட்கு அமைந்துள்ளன என்றே உணர்தல் வேண்டும். ஏனெனில், பாசம் அறியாமையை உண்டாக்குவதேயன்றி வேறில்லை. ஆகவே, பாசம் இல்லையாயின், அறியாமை இல்லையாம். ஆனால், பொருள்களை 'இஃது இத்தன்மைத்து; அஃது அத்தன்மைத்து' என அறிந்துகொள்ளுதல் அறியாமை இல்லாமை என்ற ஒன்றினால் மட்டும் இயலாது. அவ்வாறு அறியும் தன்மையும் வேண்டும். அதனால், 'அவ்வாறு தானே அறிந்தும், உயிர்கட்கு அறிவித்தும் நிற்பவன் இறைவன்: அவன் அறிவிக்க அறிவன உயிர்கள்' என்பதையும் 'கற்றதனால் ஆய பயன்' என்று கல்வியின் இன்றியமையாமை கூறியதனாலே

விளங்கிற்று. 'வாலறிவன்' என்றதில் இத்துணைக் கருத்துக்கள் பொதிந்துள்ளன. எனினும், அவற்றில் 'பிறர் அறிவிக்கவேண்டாது தானே இயல்பாக அறியும் இயற்கையுணர்வு உடையவன் இறைவன்' என்பதையே இங்குச் சிறப்பாகத் திருவள்ளுவர் கருதுகின்றார் என்பது, 'உயிர்களின் அறிவு கல்வியினாலே விளக்கம் பெறுவதாகும்' என்பதை இதனுடன் சேர்த்துக் கூறியிருப்பதனால் தெரியவரும்.

இங்ஙனம் இறைவன் தானே அறிபவன்; அழுந்தாது நின்று அறிபவன்; அதனால், பாசத்தில் கட்டுண்ணாதவன் என்பதும், உயிர்கள் தாமே அறியாது அறிவிக்கவே அறியும், அறியப்படும் பொருளில் அதுவதுவாய் அழுந்திநின்று அறியும்; அதனால் பாசத்திற் கட்டுண்டது என்பதும் விளங்குதலால், 'இத்தகைய உயிர்க்கு அத்தகைய இறைவனைத் தொழுதலன்றி, வேறு உறுதியில்லை' என்பதை விளக்கவே திருவள்ளுவர்,

> "கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்"

எனக் கூறியுள்ளார். இங்குக் கூறப்பட்ட கருத்துக்கள் பலவும் சைவ சித்தாந்தத்துட் கூறப்படுதல் காணலாம்.

> "அறிவிக்க அன்றி அறியா உளங்கள்"
>
> (சிவஞான போதம். சூ. அதி. 2,)

> "பொறிபுலன் கரணம் எல்லாம்
> புருடனால் அறிந்தான் மாவை
> அறிதரா அவையே போல
> ஆன்மாக்கள் அனைத்தும் எங்கும்
> செறிதரும் சிவன்றனாலே
> அறிந்திடும்; சிவனைக் காணா;
> அறிதரும் சிவனே எல்லாம்
> அறிந்தறி வித்தும் நிற்பன்."

> "அறிந்திடும் ஆன்மா ஒன்றை
> ஒன்றினால் அறித லானும்,
> அறிந்தவை மறத்த லானும்,
> அறிவிக்க அறித லானும்,
> அறிந்திடும் தன்னை யும்தான்
> அறியாமை யானும், தானே
> அறிந்திடும் அறிவன் அன்றாம்:
> அறிவிக்க அறிவன் அன்றே."
>
> (சிவஞான சித்தியார் - சூ - 5ல் 1, 2.)

என்பன முதலாக வரும் சாத்திரங்களைக் காண்க. இவ்வாறு அறநெறி அருள்நெறியையே காட்டிநிற்றல் அறிந்து இருவகை நெறியையும் யாவரும் கடைப்பிடிப்பார்களாக.

# எடுத்த பாதம்

சி. அ.

இறைவன் கொள்ளும் திருமேனிகள், 'அருவம், உருவம், அருவுருவம்' என மூன்று வகைப்படும். அருவத்திருமேனி அறிவுக்கு அறிவாய் நின்று பொருள்களை அறியச்செய்வது. அது புறக் கண்ணுக்குப் புலனாகாது. யோகியரது அகக் கண்ணிற்குப் புலனாவதாம். உருவத் திருமேனியும் தவத்தோர்க்கே புலனாவதாயினும், அதனைத் தவத்தோர்கள் கண்ட காட்சியின் வழி அவர்களது அருள் மொழிகளைக் கொண்டு படிமத்தில் யாவரும் கண்டு வணங்குதல் கூடும்.

அருவுருவத் திருமேனி ஒளிவடிவாகிய சிவலிங்க மூர்த்தமே. இது கண்ணுக்குப் புலனாவதாயினும், முகம், கை கால் முதலிய உறுப்புக்கள் இன்றிப் பிழம்பளவாய் இருத்தலின், அருவுருவமாகின்றது. மேலும், ஒளி ஒருகாற் புலனாகியும், மற்றொருகாற் புலனாகாமலும் இருத்தலின், ஒளிவடிவம் அருவுருவத் திருமேனியாகின்றது. எனவே, முகம், கை, கால் முதலிய உறுப்புக்களுடன் இனிய காட்சியை வழங்கிநிற்பது உருவத்திருமேனியேயாம்.

உருவத் திருமேனிகளில் கூத்தப்பெருமான் வடிவம் சிறப்புடையதொன்று. சைவ சமயத்தில், 'கோயில்' எனப்படும் தில்லையில் கூத்தப் பெருமானது திருநடனக் காட்சியே சிறந்து விளங்குகின்றது. இக்காட்சியைக் கண்ட அருட்பெருமக்கள் அளவிலா ஆனந்தம் உற்ற அனுபவ நிலையைக் கூறும் வரலாறுகள் பல.

அப்பர் பெருமான் தில்லையில் கூத்தப்பெருமானை வணங்கிப் பெற்ற அனுபவத்தின் பயனாக அவரது திருவாய் மலரினின்றும் வெளிப்பட்ட திருப்பாடல்கள் பல. ஒரு திருப்பதிகத்தில் அம்பல வாணனது அருட்டிருமேனியில் ஒவ்வோர் உறுப்பிலும்

ஈடுபட்டு எய்திய இன்பத்தினை முறையாக எடுத்தருளிச் செய்துள்ளார்.

நடராசப் பெருமானது வடிவத்தில் தூக்கிய திருவடியே முதன்மையாகக் குறிப்பிடப்படுவது. இஃது இடப்பக்கத்தினின்றும் வலப்பக்கம் சென்று வளைந்து நிற்பதால், 'குஞ்சித பாதம்' எனப் போற்றப்படுகின்றது. 'உண்மை விளக்கம்' என்னும் சாத்திரச் செய்யுள் 'தூக்கிய திருவடியே ஆன்மாக்களுக்கு அருளலைச் செய்வது, அவைகளை ஆனந்தத்தில் அழுத்துவது' எனக் கூறுகின்றது. அப்பர் பெருமான் அத் திருவடியின் சிறப்பைக் கூறும் முறை இது :

சாட எடுத்தது தக்கன்றன் வேள்வியில் சந்திரனை ;
வீட எடுத்தது காலனை ; நான்முகன் நாரணனும்
தேட எடுத்தது ; தில்லையுள் சிற்றம் பலத்துநட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றோநம்மை ஆட்கொண்டதே.

இதில், 'இறைவன் தில்லைத் திருத்தலத்துள் திருச்சிற்றம்பலமாகிய ஞானவெளியில் உருவத்திருமேனிகொண்டு நடனமாடுதற்கு எடுத்திட்ட பாதம் - தூக்கிய திருவடி, நடனம் ஆடுதற்கு மட்டும் தூக்கவில்லை : மற்றும் எத்தனையோ காரியங்கட்காக உயர்த்தப்பட்டது' என்கின்றார் நாவுக்கரசர்.

அத்திருவடி ஒருமுறை தன்னை மதியாது தக்கன் செய்த யாகத்தில் அவனது அதிகாரத்திற்கு அஞ்சி அங்குச்சென்றிருந்த அமரர் பலரையும் ஒறுத்தபொழுது, சந்திரனைக் கீழே இட்டு மிதித்துத் துவைத்துத் தேய்த்தற்காகத் தூக்கப்பட்டது ( தக்கன்றன் வேள்வியில் சந்திரனைச் சாட எடுத்தது ). மற்றொருமுறை தன்னை வழிபட்டுநிற்கும் அந்தணச் சிறுவனிடத்தில் தனது அதிகாரத்தைச்செலுத்தி அவனைப் பாசத்தாற் கட்டி இழுத்த கூற்றுவனை உதைத்துத்தள்ளி உருட்டுவதற்காக எடுக்கப்பட்டது ( காலன் ஐ வீட எடுத்தது. ஐ - தலைமை; அதிகாரம். வீட - அழிய ). இன்னொருமுறை, உலகிற்குத் தாங்களே தலைவர் என்று செருக்கிப் போர் புரிந்த மாலும் பிரமனும் அச்செருக்கு நீங்கி அமைதியுறுதற்பொருட்டு வாங்கப்பட்டது. ( நாரணன் நான்முகனும் தேட எடுத்தது. எடுத்தது - வாங்கிக்கொண்டது. )

'எடுத்தபாதம் இங்ஙனம், சந்திரனையும் காலனையும், மால் அயன் என்பவரையும் முன்னர் ஒறுத்ததாயினும், பின்னர் அவர்கட்கு அருள்புரிந்தே ஆட்கொண்டது. ஆகவே, நம்மை (நாவுக்கரசரை) முதலில் சூலைநோயைத் தந்து, பின்பு தனக்கு உரிமையாக ஆண்டுகொண்டதும் அந்தத் திருவடியேயன்றோ' (ஆட எடுத்திட்ட பாதம், சாட எடுத்தது; வீட எடுத்தது; தேட எடுத்தது. அதனால் நம்மை ஆட்கொண்டது அதுவேயன்றோ) என்று, அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனை அடைந்து அவனது எடுத்த திருப்பாதத்தைக் கும்பிட்டு அதனது அருள் நிலையில் ஈடுபட்ட அப்பர் பெருமான் அருளிச் செய்கின்றார்.

இறைவனது ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் இரு சத்திகளே அவனது இரண்டு திருவடிகளாதலானும், அவற்றுள் ஞானசத்தி வலத் திருவடியும், கிரியாசத்தி இடத் திருவடியும் ஆதலானும், 'ஞானசத்தியாகிய வலத் திருவடி அஞ்ஞானமாகிய ஆணவத்தை - முயலகனை மேல் எழ ஒட்டாமல் ஊன்றி நிற்க, கிரியா சத்தியாகிய இடத் திருவடி ஆன்மாக்களை அவ்வாணவத்தின் பிடிப்பினின்றும் எடுத்து ஆட்கொள்ளுகின்றது' எனக் கூறுகின்றது உண்மை விளக்க நூல். அங்ஙனம் ஆணவ பந்தத்தினின்றும் ஆன்மாக்களை எடுக்கும் முறையையே அப்பர் பெருமான் இவ்வாறு விரித்தருளிச்செய்தார். இதில் நாவுக்கரசர், 'என்னை' என்னாமல், "நம்மை" என, எல்லோரையும் தம்மோடு சேர்த்துக்கொண்டு கூறியிருத்தலால், நம் அனைவரையும் ஏதேனும் ஒருமுறையில் ஆட்கொள்வது அவ்வெடுத்த திருப்பாதமேயாகும். அதனால், அதனை அனைவரும் அடைந்து உய்வோமாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil

An exceedingly neatly maintained temple with God's presence at every spot inside the temple. I go after Darshan with supreme satisfacties.

(Sd.) R. A. Rao,
Asst. General Manager,
Indian Overseas Bank Ltd., Madras.

# திருவிழாத் தத்துவங்கள்

**முதல் திருநாள் தத்துவம் :**

தூலதேகத்தை நீக்கிக்கொள்ளும் பயனை விளக்குவதாகும்.

**கோடியேற்று விழா**

சிவாலயங்களில் முன்னே உள்ள இடபம் அறவிடை, ஊழிக் காலத்தில் அழிவிற்கு அஞ்சிய அறக்கடவுள் (தருமதேவதை) வெள்விடை உருவங்கொண்டு சிவபெருமானைச் சரண் அடைய, அவர் அதனை ஊர்தியாகவும், கொடியாகவும் கொண்டார். அந்த அறக்கொடியைப் பெருவிழாவின் தொடக்கத்தில், தேவர் முனிவர் முதலாகப் பலரும் அறிய உயர்த்துக் கட்டுவதே கொடி ஏற்றம். பஞ்சகிருத்தியங்களுள் கொடியேற்றம் சிருட்டியைக் குறிக்கும்.

**இரண்டாந் திருநாள் தத்துவம் :**

தூலம் சூக்குமம் என்னும் இருவகை யாக்கையையும் நீக்கிக்கொள்ளும் பயனைக் குறிப்பதாகும்.

**கற்பக விருட்சக் காட்சி**

வாகன உற்சவங்கள் எல்லா உயிர்களையும் காப்பாற்றுகின்ற திதித் தொழிலைக் குறிக்கும். கற்பகவிருட்சக் காட்சி, இந்திராதி போகங்களையும் அருளுபவர் சிவபெருமானே என்பதைவிளக்கும்

**மூன்றாந் திருநாள் தத்துவம் :**

மூவினையும், முப்புத்தியும், முக்குணமும், மும்மனமும், முக்குற்றமும், முப்பிறப்பும், முப்பற்றும் ஆகிய இவைகளை ஒழித்தற் பொருட்டாகும்.

## பூத வாகனக் காட்சி

பூதம், பஞ்ச பூதங்களையும் உயிர்களையும் குறிக்கும். சிவ பெருமான் பூத வாகனத்தின்மேல் எழுந்தருளிவருதல், அவர் தத்துவாதிபதியாயும், உயிர்க்குயிராய் நின்று அவைகளைச் செலுத்துபவராயும் இருத்தலை விளக்கும்.

**நான்காந் திருநாள் தத்துவம் :**

நாற்கரணம், நால்வகைத் தோற்றம் என்னும் இவைகளை நீக்குதற் பொருட்டாகும்.

## அதிகார நந்தி சேவை

திருக்கயிலையைக் காவல் பூண்டு நிற்கும் அதிகாரத்தைப் பெற்ற நந்திதேவர், ஸ்ரீ கண்ட பரமசிவனிடம் நேரே ஞானோப தேசத்தைப் பெற்று, சகல வர்க்கத்தினர் பலர்க்கும் ஞானாசாரிய மூர்த்தியாய் விளங்குபவர். சிவபெருமான் அதிகார நந்திமீது எழுந்தருளிவந்து காட்சி வழங்குதல், இறைவன் குருமூர்த்தியிட மாக நின்று ஞானத்தை அருளுதலை விளக்கும்.

**ஐந்தாந் திருநாள் தத்துவம் :**

புலன்களின் வழியே செல்லும் ஐம் பொறிகளும், பஞ்ச அவத்தைகளும் பஞ்ச மலங்களும் நீங்குதலைக் குறிக்கும்.

## சகோபுர இடபவாகனக் காட்சி

சிவபெருமான் ஏறிவரும் இடபம் போர்விடை. திரிபுரம் எரிக்கச்சென்ற காலத்தில், அவரது தேர் அச்சு முறிந்த பொழுது திருமால் கொண்ட இடப வடிவமே போர்விடை, திரிபுரத்தவர்களது துன்பம் பொறுக்கமாட்டாது வாயிலில் நின்று முறையிட்ட தேவர்களுக்குச் சிவபெருமான் தோன்றி அபயம் அளித்ததையே சகோபுர இடபவாகனக் காட்சி விளக்குகிறது.

## ஆறாந் திருநாள் தத்துவம் :

காமமாதி ஆறும், கலையாதி ஆறும், பதமுத்தி ஆறும், வினைக்குணம் ஆறும் ஒழிதற்பொருட்டு நிகழ்வதாகும்.

### யானை வாகனக் காட்சி

யானையின் வடிவமும், ஒலியும் பிரணவமாகும், பிரணவமே மந்திரங்கட்கெல்லாம் முதலாவது. அதுவே அம்ச மந்திரமும் ஆகும். அம்ச மந்திரத்தைக் குறிக்கும் அன்ன வாகனத்தின் மேல் எழுந்தருளிவருவது, பிரணவ மந்திரம் அம்ச மந்திரங்களால் யோகக்காட்சியில் அப்பெருமான் விளங்குவதைக் குறிக்கும்.

## ஏழாந் திருநாள் தத்துவம் :

எழுவகைப் பிறப்பு, கலையாதிகள் ஏழு, மாயாமல குணம் ஏழு என்னும் இவைகளைத் தவிர்த்தற் பொருட்டாகும்.

### திருக்கல்யாண வைபவம்

திருக்கல்யாண மகோற்சவம், உலக சிருட்டியைக் குறிக்கும். உருவம், தொழில், பெயர் ஒன்றுமின்றி நின்ற பரமசிவம், உலக சிருட்டியின் பொருட்டு சிவமும் சத்தியுமாய் இயைந்து நின்று, நாதம், விந்து முதலியனவாகப் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தருளுவர். அவ்வாறு தோற்றுவித்தருளச் சிவமும் சத்தியுமாய்க் கலந்து நிற்கும் நிலையையே திருக்கல்யாண மகோற்சவம் விளக்குகின்றது.

## எட்டாந் திருநாள் தத்துவம் :

தன்வயத்தனுதல் முதலிய கடவுட் குணங்கள் எட்டினையும் விளக்குதற் குறிப்புடையதாகும்

### குதிரை வாகனக் காட்சி

ஐம்புலன்களை அதிவேகமாகச் சென்று பற்றும் மனம் குதிரை எனப்படும். மனமாகிய குதிரையைப் பிராணனாகிய கடிவாளத்தினால் பிடித்து நிறுத்துவதே வாசியோகம் எனப்படும்.

வாசி - குதிரை. ஆகவே, சிவபெருமான் குதிரை வாகனத்தின் மேல் எழுந்தருளிவருவது, வாசியோகத்தில் விளங்கும் தியானப் பொருளாதலை விளக்கும்.

**ஒன்பதாந் திருநாள் தத்துவம் :**

சகளம், நிஷ்களம், சகளநிஷ்களம் என்னும் வடிவம் மூன்றும் சிருஷ்டி முதலிய முத்தொழில்களும் தன்மை முதலிய மூன்றிடத்து இருத்தலுமாகிய ஒன்பதும் இல்லையென்பதைக் குறிப்பதாகும்.

## திருத்தேர் விழா

திருத்தேர் விழா, சிவபெருமான் தேவர்கள் பொருட்டு, அவர்கள் அமைத்துத்தந்த தேரின்மேற் சென்று திரிபுர சங்காரம் செய்தருளியதை விளக்கும். ஆகவே பஞ்ச கிருத்தியங்களுள் இது சங்காரத்தொழிலைக் குறிப்பதாம். இதனுல், ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மல நீக்கமும் பெறப்படும்.

**பத்தாந் திருநாள் தத்துவம் :**

தீர்த்தத் திருவிழா சிவானந்தமாகிய பேரின்பக் கடலில் ஆன்மா திளைப்பதைக் குறிப்பதாகும்.

## தீர்த்தவாரி

ஸ்ரீ நடராஜப் பெருமான் பஞ்சகிருத்திய மூர்த்தி. பஞ்ச கிருத்தியத்தில் அநுக்கிரகமே மேலானது. விழாக்காலத்தில் ஒன்பது நாட்களிலும் எழுந்தருளி அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை முற்றுவித்தபின், பத்தாம் நாள் நடராஜ மூர்த்தி எழுந்தருளி வந்து தீர்த்தம் கொடுத்தல் புல்பூடு முதலிய அனைத்துயிர்களையும் ஆனந்த சாகரத்தில் அழுந்தச்செய்வதேயாகும்.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

[ மலர் 27 இதழ் 4 பக்கம் 135ன் தொடர்ச்சி ]

## தன்மாத்திரைகள் ஐந்து

மாணாக்கன் : வைகாரிகாகங்காரத்தினின்றும் கன்மேந்திரியங்களன்றி வேறும் தோன்றுவன உளவோ? இல்லையெனின், தாமதாகங்காரமாகிய பூதாதியகங்காரத்தினின்றும் தோன்றுவன யாவை?

ஆசிரியர் : வைகாரிகாகங்காரத்தினின்றும் தோன்றுவன கன்மேந்திரியங்களன்றி வேறில்லை. கன்மேந்திரியங்கட்குப் பின்னர், பூதாதியகங்காரத்தினின்றும் தோன்றுவன பூதங்களாம். பூதங்கட்கு முதற்காரணமாய் நிற்றல் பற்றியே இவ்வகங்காரம், 'பூதாதியகங்காரம்' எனப் பெயர்பெற்றது. 'பூதங்கள் ஐந்து' என்பதும், அவை 'பிருதிவி. அப்பு, தேயு, வாயு, ஆகாயம்' என்பதும் யாவரும் அறிந்தவை, பிருதிவி முதலியவை முறையே 'நிலம். நீர். தீ, வளி, விசும்பு' எனத் தமிழில் சொல்லப்படும். இம்முறை ஒடுக்கமுறை பற்றியாம். ஆகவே, அவற்றின் தோற்றம் 'ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி' என்னும் முறையில் அமைவதாம். பூதங்கள் ஐந்தும், அவற்றின் செயல்களும் ஒருவாற்றாற் புலனாவன ஆதலின், 'அவை தூலப் பொருள்கள்' என்பது வெளிப்படை. சூக்குமமாகிய காரணத்தினின்றும், தூலமாகிய காரியம் தோன்றுங்கால் நேரே தூலமாய்த் தோன்றாது முதற்கண் ஒருவாற்றாற் சூக்குமமும், ஒருவாற்றால் தூலமுமாய நிலையில் தோன்றி, அதன் பின்னரே தூலமாய்த் தோன்றுவதாம். எடுத்துக்காட்டாக, சூக்குமமாகிய வித்தென்னும் முதற்காரணத்தினின்றும் அடிமரம், கிளை, கவடு, இலை முதலியவற்றோடு தூலமாய்க் காணப்படும் மரம் முதற்கண்ணே வித்தினின்று அங்ஙனம் தோன்றாது, இடையே தூலமும் சூக்குமும் அல்லாத முளையாய்த் தோன்றியே பின்னர் மரமாய்த் தோன்றுவதாகும். அதுபோல, தூலமாகிய ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்தும் பூதாதியகங்காரத்தினின்றும் நேரே அங்ஙனம்

தோன்ருது. முதற்கண் தன்மாத்திரை வடிவில் தோன்றிப் பின்னரே பூதவடிவில் தோன்றுவனவாம். பூதங்களின் சூக்கும நிலையே தன்மாத்திரையாதல் பற்றி அவை, 'சூக்கும பூதம்' எனவும் கூறப்படும். அதனல், பூதங்களை, 'தூல பூதம்' எனவும், 'மகா பூதம்' எனவும் வழங்குவர். எனினும், 'பூதம்' என்பது தூல நிலைக்கே உரிய பெயராம். சூக்கும பூதங்கள் 'தன்மாத்திரை' என்றே சொல்லப்படும்.

மாணுக்கன் : பூதாதியகங்காரமாகிய காரணத்திற்கும், தூல பூதங்களாகிய காரியத்திற்கும் இடையே சூக்கும பூதங்களாகிய தன்மாத்திரைகள் உளவெனின், அவை யாவை என அருளிச் செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : 'சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம், என்பனவே தன்மாத்திரைகள். ரூபம், 'உருவம்' என்றும் ரசம், 'இரதம்' என்றும் தமிழ்முறையிற் சொல்லப்படும். சத்தம் முதலிய ஐந்தும் முறையே, 'ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்' என்று தமிழிற் சொல்லப்படும். இவை முறையே ஒன்றன்பின் ஒன்ருகப் பூதாதியகங்காரத்தினின்றுந் தோன்றும்.

மாணுக்கன் : 'தன்மாத்திரை' என்பதன் பொருள் யாது? அப்பெயருடைய அவற்றின் இயல்புகள் யாவை?

ஆசிரியர் : 'தன்மாத்திரை' என்பதன் பொருள் 'அதனளவாய் நிற்றல்' என்பது. அஃதாவது, வேருென்ருேடும் கூடாது தனித்து நிற்றல் என்பதாம். ஒரு பொருள் வேறு எப்பொருளோடும், எவ்வாற்ருலும் தொடர்புபடாது தனித்து நிற்றலை, 'கேவலம்' என்றும், அவ்வாறின்றி எவ்வாற்ருலேனும் பிறவற்ருேடு தொடர்புற்று நிற்றலை, 'விசிட்டம்' என்றும் வட நூலார் கூறுவர். அவை முறையே, 'தனிநிலை' என்றும், 'தொகைநிலை' என்றும் தமிழிற் சொல்லப்படும். அவற்றுள் 'தனிநிலை அல்லது கேவலம்' என்பதே, 'தன்மாத்திரை' என்பதன் பொருளாகும். இக்காரணப் பெயர் வேறு சிலவற்றிற்கும் பொருந்துமாயினும், காரண இடுகுறிப் பெயராய்ச் சூக்கும பூதங்களையே குறிக்கின்றது. தூல பூதங்கள், 'விசிட்டம்' எனப்படும் தொகை நிலையாய் நிற்றலின், சூக்கும பூதங்கள் தனி நிலை அல்லது கேவலமாய் நிற்கும் என்க.

மாணுக்கன் : தூலபூதங்கள் விசிட்டமாய் நிற்றலும், சூக்கும பூதம் அவ்வாறின்றிக் கேவலமாய் நிற்றலும் எவ்வாறு?

ஆசிரியர் : ஆகாயம், 'சத்தம்' என்னும் ஒரு குணமே உடையது. வாயு, சத்தத்தோடு, 'பரிசம்' என்னும் குணத்தையும் உடையது. தேயு, அவ்விரண்டனேடு, 'உருவம்' என்பது

கூட, மூன்று குணத்தையுடையது. அப்பு, அம்மூன்றனோடு 'இரதம்' என்பது கூட, நான்கு குணத்தையுடையது. பிருதிவி, 'சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்' என்னும் ஐந்து குணங்களையும் உடையது. ஒன்றின் ஒன்று ஏற்றமாக உடைய குணம், அவ்வப் பூதங்கட்குச் சிறப்புக் குணமாகும். அஃதாவது, வாயுவுக்குப் பரிசமும், தேயுவுக்கு உருவமும், அப்புவுக்கு இரதமும், பிருதிவிக்குக் கந்தமும் சிறப்புக் குணங்கள். ஏனையவை பொதுக் குணங்கள். இச்சிறப்புக் குணங்கள் தூல பூதங்களில் பலவகை வேறுபாட்டுடன் காணப்படும். அவ்வேறுபாடுகளை யுடையதாய் இருத்தலே விசிட்டம். அவ்வாறின்றிப் பொதுமையின் நிற்பதே கேவலம், அஃதாவது, ஆகாயத்தின் குணமாகிய சத்தம், வல்லோசை, மெல்லோசை, இடையோசை எனப் பலவாறு காணப்படும். ஆகவே ஆகாயம் தனது சத்தகுணம் வன்மை, மென்மை, இடைமை என்பவற்றோடு கூடிப் புலனாகி நிற்றலே விசிட்டமாய் நிற்றலாம். அதனால், அவ்வேறுபாடின்றி 'ஓசை' எனப் பொதுமையில் நிற்பதே கேவலம். அந்நிலையே 'சத்த தன்மாத்திரை' எனப்படுவது.

இவ்வாறே வாயுவின் சிறப்புக் குணமாகிய பரிசம் வாயுவினிடத்தில் தட்பம், வெப்பம் முதலாகப் பலவேறு வகையாயும், தேயுவின் குணமாகிய உருவம் தேயுவினிடத்தில் செம்மை, கருமை, வெண்மை, பசுமை, பொன்மை முதலாகப் பலவேறு வகையாயும், அப்புவின் சிறப்புக் குணமாகிய இரதம் அப்புவினிடத்தில் தித்திப்பு, கசப்பு, புளிப்பு முதலாகப் பல்வேறு வகையாயும், பிருதிவியின் சிறப்புக் குணமாகிய கந்தம் பிருதிவியினிடத்தில் சுகந்தம், துர்க்கந்தம் என இருவேறுவகைப்பட்டுப் பலவாயும் காணப்படும். அவை அங்ஙனம் வேறுபட்டு வெளிப்பட நிற்கும் நிலையே அவ்வப்பூதங்கள் விசிட்டமாய் நிற்கும் நிலையாம். அவ்வாறின்றிப் பொதுமையில், பரிசம், உருவம், இரதம், கந்தம் என்னும் அளவாய் நிற்றலே தன் மாத்திரை என்று உணர்வாயாக.

இனி, 'சத்த தன்மாத்திரை, பரிச தன்மாத்திரை, உருவ தன்மாத்திரை, இரத தன்மாத்திரை, கந்த தன்மாத்திரை' எனச் சொல்லப்படுவது பற்றி. அத் தன்மாத்திரை ஒவ்வொன்றும் சத்தம் முதலிய ஒவ்வொன்றேயே நிற்கும்போலும் என மயங்குதல் கூடாது. ஏனெனில், சத்தம் ஒழிந்த ஏனைய நான்கு தன்மாத்திரைகளும், பூதங்களிற் சொல்லியதுபோல அமைந்து, அதனதன் சிறப்புக் குணம் பற்றி. 'பரிச தன்மாத்திரை, உருவ தன்மாத்திரை, இரத தன்மாத்திரை, கந்த தன்மாத்திரை' என வழங்கப்படுகின்றன ஆதலின் என்க.

எனவே, பூதாதி யகங்காரத்தினின்று தன்மாத்திரைகள் தோன்றுங்கால் முதற்கண் சத்தம் ஒன்றேயாய்ச் சத்த தன்மாத்திரை தோன்றும். அதன்பின், சத்தத்தோடு பரிசம் கூடிப் பரிச தன்மாத்ரை தோன்றும். அதன்பின் உருவதன்மாத்திரையும், அதன்பின் இரத தன்மாத்திரையும், அதன்பின் கந்த தன்மாத்திரையும் முன்முன் தோன்றிய குணங்களொடு கூடியே தோன்றும். ஆகவே, இம்முறையில் நோக்கும்பொழுது, சத்த தன்மாத்திரை ஒன்றே கேவலம், ஏனைய நான்கும் விசிட்டமாம்.

மாணாக்கன் ; தன்மாத்திரைகளையும் பூதங்கள்போலவே விசிட்டமாகக் கூறவேண்டுவது என்னை? 'சத்தம் முதலிய ஐந்தும் தனித்தனிக் கேவலமாய் நிற்கும் நிலையே தன்மாத்திரையாம்' எனக் கூறுதலன்றோ 'தன் மாத்திரை' என்னும் பொதுப் பெயருக்கும், பரிச தன்மாத்திரை முதலிய சிறப்புப் பெயருக்கும் பூதங்களின் வேறாக வைத்து எண்ணுவதற்கும் பொருந்துவதாகும்?

ஆசிரியர் : அறியாது வினவுகின்றாய்! 'காரியத்தில் உள்ளது காரணத்திலும் உளதாகும்' என்பது நியமமாகலின். பூதங்களில் பலவகை வேறுபாட்டோடு தூலமாய்க் காணப்படும் குணங்கள், அப்பூதங்கட்குக் காரணமாகிய தன்மாத்திரையிலும் வேறுபாடின்றிச் சூக்குமமாய்க் கிடத்தல் வேண்டுமாதலாலும், அவ்வாறில்லையேல் ஓரோவொரு குணமேயுடையவற்றினின்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்னும் குணங்களையுடையவை தோன்றுதல் கூடாதாகலானும், இவற்றிற்கு, 'தன் மாத்திரை' என்னும் பெயர் பொருந்துமாற்றை முன்பே கூறினேமாதலாலும், சத்தம் ஒழிந்த ஏனைய தன்மாத்திரைகள் நான்கும் கேவலமாகாது. விசிட்டமேயாம் என்பது நன்குணர்ந்து கொள்க. ஆகாயம் சத்த குணம் ஒன்றேயுடைமையின், அது கேவலமாய் நிற்கும் சத்த தன்மாத்திரையினின்றும் தோன்றுதல் கூடும் என்க.

இவ்வாற்றல் தன்மாத்திரைக்கும். பூதங்கட்கும் தம்முள் வேற்றுமை, முளையும், மரமும்போலச் சூக்குமமும், தூலமுமாம் அவ்வளவே ; வேறில்லை. எனவே, பூதாதியகங்காரத்தினின்றும் தன்மாத்திரைகள் மேற்கூறியவாறு தோன்றியபின் முதற்கண் சத்த தன்மாத்திரையினின்றும் ஆகாயமும், பின்னர்ப் பரிச தன்மாத்திரையினின்றும் வாயுவும், அதன்பின் உருவ தன்மாத்திரையினின்றும் தேயுவும், அதன்பின் இரத தன்மாத்திரையினின்றும் அப்புவும், அதன்பின் கந்த தன்மாத்திரையினின்றும் பிருதிவியும் தோன்றும் என்பது உணர்ந்துகொள்க.

(தொடரும்)

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல்
வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.

( மலர் 27, இதழ் 4, பக்கம் 1 8 இன் தொடர்ச்சி )

## (10) கண்ணப்ப நாயனர்

" கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க்கு அடியேன் "

— திருத்தொண்டத் தொகை.

" நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்
நலத்தில் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்நடுங்கி
வலத்தில் கடுங்கணை யால்தன் மலர்க்கண் இடந்தப்பினுன்
குலத்தில் கிராதன்நம் கண்ணப்ப ஞமென்று கூறுவரே "

— திருத்தொண்டர் திருவந்தாதி.

கடப்பை மாவட்டத்தின் ஒரு பகுதி அக்காலத்தில் பொத்தப்பிநாடு என வழங்கப்பெற்றது. இந்நாட்டின் ஊர்களில் ஒன்று உடுப்பூர். மலைகளும் காடுகளும் சூழப்பெற்று விளங்கிய இவ்வூர் வேடர்கள் வாழும் இடமாக இருந்தது. வேடர்களின் தலைவன் பெயர் நாகன். அவன் மனைவியின் பெயர் தத்தை.

### திருவவதாரம் :

நாகன் தத்தை இருவரும் நீண்டநாள் மகப்பேறின்றி வருந்தி முருகனை வேண்டி வழிபட்டனர். சேவல் மயில் முதலியவற்றை முருகனுக்குக் காணிக்கையாக விட்டும் விழா வயர்வித்தும் பலவாறு மகப்பேறு கருதி முருகனை வழிபட்டு வந்தனர். அப்பெருமான் திருவருளால் உவர்க்கடல் நிறை மதியைப் பெற்றெடுத்ததுபோல தத்தை ஓர் ஆண்மகவை பெற்றெடுத்தாள். நாகனும் வேடர்களும் மகிழ்ந்தனர். நாகன் தன் குழந்தையை ஆசையோடு தழுவி எடுத்தபோது அக்குழந்தை திண்மையாய் இருந்ததால் திண்ணன் என்று பெயரிட்டான். தெய்வங்களை வழிபட்டுத் திருவிழாக்கள் எடுத்து மகிழ்ந்தான்.

**விற் பயிற்சி :**

வேடர்குல மரபுப்படி திண்ணனுர்க்கு அணிகலன்கள் டுணிவித்து பெற்ருேர் அவரை அன்போடு வளர்த்தனர். திண்ணனுர் சிறு குழந்தைப் பருவத்தில் அஞ்சாநெஞ்சும் ஆண்மையும் உடையவராய் வேடர்கள் வளர்க்கும் காட்டு விலங்குகளோடு அஞ்சாது விளையாடி மகிழ்ந்து வந்தார். வயது ஏறிற்று. நாகன் திண்ணனுர்க்கு விற்பயிற்சி அளிக்க விரும்பினுன். வில்வித்தை வல்லோரை அழைத்து நல்ல நாள்பார்த்து உற்ருர் உறவினரையெல்லாம் வருவித்து திண்ணனுர் விற்பயிற்சி தொடங்கும் நாளைக் கொண்டாடினுன். வில்லாசிரியன் மங்கல வாழ்த்துக்கள் முழங்க திண்ணனுர் கையில் வில்லெடுத்துக் கொடுத்து விற்பயிற்சியைத் தொடங்கி வைத்தான். திண்ணனுர் விற்பயிற்சியோடு வாள்வேல் ஈட்டி முதலிய படைக்கலப் பயிற்சிகளையும் விரைந்து கற்றுத் தேர்ந்தார். பதினுறு வயதில் கலையனைத்தும் நிரம்பிய முழுமதியாய்ப் புண்ணியத்தின் உருவமாய்த் திண்ணனுர் திகழ்ந்தார்.

திண்ணனுரின் திறமைகளை யறிந்து மகிழ்ந்தான் நாகன். ஒருநாள் வேடர் குடிமக்கள் நாகனை அடைந்து தங்கள் பயிர்களைக் காட்டுப்பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகள் அழிக்கின்றன. அவ்வழிவை நீக்கித் தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று வேண்டினர். அதற்கு நாகன் நான் முதுமையடைந்து விட்டேன். ஆதலால் முன்போல் வேட்டைக்குச்செல்ல முடியவில்லை. திண்ணனை நீங்கள் அரசனுக ஏற்றுக்கொள்ளவேண்டுகிறேன் என்று கூறினுன். வேடர்களும் மகிழ்ந்து அதற்கு உடன்பட்டனர். நாகன் திண்ணனுரை அழைத்து ஆசனததில் அமர்த்தி தன் அரசுரிமைகளை வழங்கி வாழ்த்தினுன்; வேடர் குடிமக்களுக்குப் பாதுகாப்பளிக்கக் கன்னி வேட்டைக்குச் சென்று வருமாறு பணித்துத் தேவராட்டியை விளித்து வெற்றி வேண்டிக் காட்டிலுள்ள தெய்வங்களுக்கு வழிபாடுகள் செய்யுமாறு கட்டளையிட்டான்.

**கன்னி வேட்டை :**

அரசுரிமையேற்ற திண்ணனுர் மறுநாட் காலையில் எழுந்து கடன்களை முடித்து வேட்டைக்குரிய கோலம் புனைந்தார்; வில்லை வணங்கி நாணேற்றி அதனைக் கையில் எடுத்துக்கொண்டு

புறப்பட்டார். காடுபலியூட்டிய தேவராட்டி வந்து அட்சதை யிட்டு திண்ணனாரை வாழ்த்தி வழியனுப்பினாள். வேடர் பலர் சூழ்ந்துவர வேட்டை நாய்கள் அருகில் தொடர்ந்துவரத் திண்ணனார் காட்டிற்குள் சென்றார். வேடர்கள் காட்டின் பல திசைகளிலும் சென்று காட்டு விலங்குகளைக் கொன்று வேட்டை யாடினர். வலையறும்படி ஓடிய விலங்குகளை நாய்கள் பற்றிக் கொணர்ந்தன. பிறப்பிறப்புக்களுக்கு உட்படுத்தும் நல்வினை தீவினையாகிய வலையிடை அகப்பட்டுச் சுழன்று நிற்பவர் நன்னெறி சேரமுயலும் மனத்தைத் தடுத்துத் தம்வசப்படுத்தும் ஐம்பொறிகளின் நிலைமையை அந்நாய்களின் செயல்கள் விளக்கின.

இவ்வாறு வேடர்கள் வேட்டையாடும்போது அறநெறியைக் கடைப்பிடித்தனர். யானைக்கன்றுகள், விலங்குகளின் சிறு குட்டிகள் கருவுற்ற பெண் விலங்குகள் இவற்றைக் கொல்லாது விடுத்தனர். இவ்வண்ணம் வேடர்களோடும் திண்ணனார் காட்டில் வேட்டையாடினார்.

காட்டுப் பன்றி:

வேடர்களின் ஆரவாரத்தால் வெருண்ட காட்டுப்பன்றி ஒன்று வலைகளை அறுத்துக்கொண்டு ஓடத்தொடங்கியது. அதைத் துரத்திக்கொண்டே திண்ணனார் அதனைப் பின் தொடர்ந்து ஓடினார். திண்ணனாரின் மெய்க்காவலர்களாகிய நாகன், காடன் ஆகியோரும் அவரைத் தொடர்ந்து ஓடினர். அப்பன்றி நெடுந்தூரம் ஓடிச்சென்று ஒரு மரநிழலை அடைந்து வலியிழந்து நின்றது. திண்ணனார் வாளை உருவி அதனைக்குத்தி வீழ்த்தினார். பன்றி இறந்து வீழ்ந்தது. நெடுந்தொலைவு ஓடிவந்ததால் இளைப்புற்ற நாணனும், காடனும் இப்பன்றியை நெருப்பிலிட்டுக் காய்ச்சித் தின்று நீர் அருந்தி இளைப்பாறி வேட்டைக்குச் செல்லலாம் என்று கூறினர். திண்ணனாரும் அதற்கு இசைந்து தண்ணீர் எங்கே உள்ளது என்று வினவினார் அதற்கு நாணன் நம் எதிரே தோன்றும் நெடியமலைக்கு அருகில் பொன்முகலி ஆறு ஓடுகிறது என்று கூறினான். எல்லோரும் பன்றியை எடுத்துக்கொண்டு அவ்வாற்றின் கரையை அணு கினர்.

**காளத்தி மலை :**

சிறிது தூரம் வந்த திண்ணனர் காளத்திமலையைக்கண்டார், அம்மலை அவர் கருத்தைக் கவர்ந்தது. இம்மலையின் உச்சிவரை போய்வருவோம் என்று நாணனை அழைத்தார். அதற்கு நாணன் அங்குச் சென்ருல் நல்ல காட்சியைக் காணலாம். மலையுச்சியில் குடுமித்தேவர் இருப்பார் ; அவரையும் கும்பிடலாம் என்றனன். அதற்குத் திண்ணனர் இம்மலையை அணுகும் போதெல்லாம் என்மேல் உள்ள பாரம் குறைவதுபோலத் தோன்றுகிறது ; ஆர்வம் பொங்கி எழுகிறது. உள்ளமும் அம்மலையுச்சியை அடைய விரைந்து செல்கிறது என்று கூறினர். மூவரும் ஆற்றின் கரையை அடைந்து ஒரு மரநிழலில் பன்றியை வைத்தனர். திண்ணனர் காடனைப்பார்த்து நீ இங்குத் திக்கடைகோலால் தீயுண்டாக்கிப் பன்றியைப் பதப்படுத்து. நாங்கள் மலைமேல் குடுமித்தேவரைத் தரிசித்து வருகிறோம் என்று கூறி நாணனை அழைத்துக்கொண்டு மலையுச்சியை நோக்கிப் புறப்பட்டார்.

குடுமித்தேவர் காட்சி :

திண்ணனர் நாகனுடன் காளத்திமலையின் அடிவாரத்தை அடைந்தனர். மலையுச்சியில் கடல் ஒலிபோலத் தேவதுந்துமி முழங்கிற்று. திண்ணனர் நாகனைத் தொடர்ந்து மலையில் ஏறினர். திண்ணனுக்கு முற்பிறப்புக்களில் செய்த தவத்தின் மிகுதியால் அன்பின் பெருக்கு மீதூர்ந்தது ; அதனல் பெருங்காதல் பெருகிற்று. அன்பும் உள்ளுருகும்படியான பெருவிருப்போடு நாணனைத் தொடர்ந்து உயிர்களின் அறிவு, இச்சை, செயல் முதலிய வளர்ச்சிக்குக் காரணமாக உள்ள முப்பத்தாறு தத்துவங்கள் என்னும் படிகளைக்கடந்து மலையுச்சியை அணுகினர்.

" நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத் துவங்கள் என்னும் பெருகுசோ பானம் ஏறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை ஏறி நெறிபடச் செல்லும் போதில் "

திண்ணனர் காளத்திமலையின் உச்சியை அடையும் முன்னரே பெருமானுடைய அருள் திருநோக்கம் அவர்மேல்

பதிந்தது. மலமாயாகன்மங்கள் அவரைவிட்டு அகன்றன. அன்பே வடிவமாயினர். உச்சியை அடைந்த திண்ணனர் காளத்தி மலையின் தனி முதல்வராகிய குடுமித்தேவரைக் கண்டார். ஓடிச்சென்று அவரைக் கட்டித்தழுவினர். உச்சி மோந்தார். பெருமூச்செறிந்தார். புளகாங்கிதம் அடைந்தார். ஆனந்தக்கண்ணீர் பெருக்கினர். 'அடியேனுக்கு இவர் கிடைத்தார்' என்று உள்ளம் மகிழ்ந்து ஆடிப்பாடி மகிழ்ந்தார்.

அன்பே வடிவமான திண்ணனர் பெருமானைப் பார்த்து 'கொடிய கானகத்தில் துணையின்றி நீர் தனித்திருப்பது முறையா? என்று சொல்லி மனம் மறுகினர். கைவிரல் நழுவியதையும் அறியாது அப்பெருமான்மேல் சார்த்தப் பெற்றிருந்த பூவையும், பச்சிலைகளையும் கண்டு 'இதனைச் செய்தார் யார்?' என்றார். நாணன் அவர் கேட்டதை அறிந்து முன்பொருமுறை உன் தந்தையோடு இங்கு வந்துள்ளேன். அப்போது ஒரு அந்தணன் இவருக்கு நீராட்டி இலையும் பூவும் ஆட்டி உணவு படைத்து ஏதோ சில மொழிகள் சொல்லிப் போனதைக் கண்டேன்; இன்றும் அவனே இதனைச் செய்திருத்தல் வேண்டும் என்று கூறினன். அதனைக்கேட்ட திண்ணனர் இவ்வாறு செய்வதே குடுமித்தேவருக்கு மகிழ்ச்சிதருவதாகும் என்பதை உணர்ந்தார். தாமும் அவ்வாறு செய்ய எண்ணினர்.

(தொடரும்)

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 3 — 00 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமாரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம்: நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.
T. M. குமாரகுருபரன் பிள்ளை B. A. B. L., அவர்கள்,
"குமாரகுருபரன்" ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

( மலர் 27, இதழ் 5, பக்கம் 212 இன் தொடர்ச்சி )

## 2. வெள்ளையானையின் சாபம் தீர்த்தது

கருவாசனை கழிக்கும் காசிமாநகரில் துருவாச முனிவர் ஓர் சிவலிங்கம் ஸ்தாபித்து பூசை புரிந்து வந்தார். பூசனை யேற்று மகிழ்ந்த புனிதன் தலைமேலிருந்து பொன்னொத்த எழில் மிளிரும் தாமரை மலர் விழ, முனிவர் தம் கைகளில் அதனைப் பிரசாத மாக ஏற்றுக் களிகூர்ந்தார். பூவுலகு விடுத்துக் கற்பக மரங் களால் கவின்பெறும் பொன்னுலகு சென்றார்.

### செருக்கினால் வந்த சிறுமை :

அசுரர்களையெல்லாம் அழித்த மகவான் மிக்க செருக்கோடு வெள்ளையானை மீதமர்ந்து பவனி வந்துகொண்டிருந்தான். ஏந்திழையார் இருமருங்கிலும் நெருங்கிநின்று கீதமிசைத்துக் கவரியிரட்டினர். 'அங்கட் கடலின் நெடுங் கூம்பக நிமிர்ந்த வங்கந்தனை உய்க்கும் மீகாமனென' வெங்கட் களிற்றின் மிசை வரும் அவனைக் கண்டு அடிபணியும் அமரர் பலரும் தத்தம் கையுறைப் பொருள்களைக் கற்பகக்காவேந்தனுக்குக் காணிக்கை யாக்கினர். அருகணைந்த முனிவர் துர்வாசரும் இங்கரிய ஆசி மொழி செப்பித் தன் செங்கரத்தின் நீங்கரிய தாமரையை நீட்டினார். தாங்கரிய செல்வத் தருக்கினால் அதனைத் தன் ஒரு கையால் வாங்கி மதயானையின் மத்தகத்தில் வைத்தான் மதியில்லான். வினைவயத்தால் அவ்வாசமலரைத் தன் காலடியி லிட்டுத் தேய்த்தது வாசவனின் வாரணம்.

## துருவாசரின் கோபம் :

தூண்ணெனக் கோபங்கொண்ட துர்வாசர் அமரரோதுங்க கொதித்தால மூண்டானென உருத்து நின்றார். செந்தாமரை சிதைய உன் செருக்கன்றோ காரணமாயிற்று. அமரர் கையுறை களையே மதித்தாய். அரனுடைய திருமுடிமேல் சாத்திய அரிய மலரைச் சிதைத்தாய். திருமால், பிரமனைப் போல தேவர்கள் வணங்க வாழ்கின்ற இந்த வீறார்ந்த வாழ்வு - ஆலம் உண்ட வனைப் பூசித்த பேறென்று உணரத் தவறிவிட்டாய்.

" வண்டுளருந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்
அண்டர்தொழ வாழுமுன் னிறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென் றுணர்ந்திலையால். "

ஆகவே, வானவ! நின் தலை பாண்டியருள் ஒருவனது கை - வளைப்படையால் சிதறட்டும். உனது நாற்கோட்டுக் குஞ்சரமும் காட்டானையாகிக் கானில் திரியட்டும் என்று சாபங்கொடுத்தார். தான் செய்த தவற்றை உணர்ந்து வருந்திய இந்திரன்பால் இரக்கம் கொண்ட துர்வாசர் தனது சாபத்தைச் சிறிதே மாற்றி 'உனது தலைக்குவரும் இடையூறு முடியளவாகிச் செல்லும். நூறாண்டுகள் காட்டானையாக அலைந்தபிற்பாடு, உனது யானை யும் பொன்னுலகு அடையலாம் என்று அருளிச் செய்தார்.

## வெள்ளை யானையின் வழிபாடு :

இந்திரன் அடைந்த சாபத்தின் விளைவை வளையெறிந்த படலத்துள் காணலாம். ஆகவே அதுகுறித்து இப்பொழுது சிந்திக்காமல் நமது கவனத்தை யானைபால் திருப்புவோம். புனித மலரைப் புழுதியில் தேய்த்த அந்தப் பொல்லா வேழம் மலை - காடு - புறவமெங்கும் நூறாண்டுக்காலம் சுற்றியலைந்த பின்பு காவொடு பயிலும் தெய்வக் கடம்பவனம் வந்தடைந்தது.

துர்வாச முனிவரது சாபம் நீங்கும் காலமும் அதுவாகவே இருந்தது. நல்லறிவு பெற்ற தெய்வதக் களிறு அங்கே பொற் றாமரைப்பொய்கையைக் கண்டு மூழ்கி எழும்போது முழுத்தழல் மேனியானைக் கண்குளிரக் கண்டது. அண்டர் நாயகனைத் துதிக்கையில் கொண்ட நீரால் நீராட்டி - பொன் பூக்களால்

பூசனையும் புரிந்தது. பாம்புடைத்தாய வேணிப் பிரான் அதன் வழிபாட்டிற்குத் திருவுள்ளமிரங்கி வரமருளச் சித்தமானார். கயிலை நாதனைக் கனிந்த மனமுடன் நோக்கிய கரியும் - பெருமானின் விமானம் சுமக்கும் எட்டு யானைகளில் தன்னையும் ஒன்றாகக் கூட்டி அருளப் பிரார்த்தித்தது. இறைவனோ 'நமதன்பிற்குரிய இந்திரனைச் சுமந்து வாழ்வதே உனக்குரிய வாழ்வாகும்' என்று பொன் உலகம் செல்லப் பணித்தார்.

### வருத்தம் நீங்கிய வாரணம் :

பிறை முடிப் பெம்மான் அருளால் மேற்றிசையில் தீர்த்த மொன்றை அமைத்தது. அங்கேயே சிவலிங்கமொன்றையும் வினை தீர்க்கும் வேழமுகப் பெருமானையும் தாபித்துப் பலநாள் வழிபட, பொன்னுலகின் தலைவன் தன் ஆட்களைவிட்டு யானையை அழைத்துவரச் சொன்னான். தமிழ் மதுரைப் பெருமானை விட்டுப் பிரிய மனமில்லாமல் பின்னும் கீழ்த்திசையில் தனது பெயரால் ஊரொன்றை அமைத்து, தன் தலைவனாகிய இந்திரன் பெயரால் ஓர் இலிங்கத்தையும் நிறுவிப் புகழ்கொண்டது.

அமரருலகினின்றும் மீட்டும் ஆட்கள் வரவே சாபந்தீர்த்த சோமசுந்தரப் பெருமானை வணங்கி விடைகொண்டு இந்திரனுழைப் புக்கது. பூவுலகில் புண்ணிய மூர்த்தியாக விளங்கும் சொக்கேசனின் பெருமைகளைத் தலைவனிடம் எடுத்துக் கூறி அவனுடைய திருவடி தாங்கும் பணியில் பணிந்து நின்றது.

வெள்ளை யானையால் தாபிக்கப்பெற்ற இத் திருமூர்த்திகளை வழிபடுவோர் அறம் - பொருள் - இன்பங்களை இம்மையிலேயே குறைவறப் பெற்றுப் பின்பு முத்தி நெறி சேர்வர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை என்பதோடுகூட "செம்மையில் விளை பேரின்பச் சிவகதிச் செல்வராவார்" என்கிறார் பரஞ்சோதி முனிவர்.

(வளரும்)

# வேனில்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A.. Dip. Ling.

( மலர் 27, இதழ் 5, பக்கம் 223 இன் தொடர்ச்சி )

இளவேனில் என்றுரைத்தால் இளைஞர்க்குப் பேரின்பம்!
எமது வாழ்வில்
தளவமென மகிழ்வதனை மலர்த்தியநல் பருவமது;
தமிழ்போல் நெஞ்சில்
அளவறுநல் லின்பத்தை அளிக்கின்ற மடவார்கள்
அணைத்தே இன்பம்
களவாகத் தருதற்குக் கைகொடுத்த பருவம்'எனக்
கைகுவிப்பார்! (12)

பூத்திருக்கும் புதுமலர்கள்; புகுந்திருக்கும் புதுவண்டு
புதுமைப் பண்ணால்
கூத்திருக்குங் குறிப்புடனே குதித்தாடும்; மரமெல்லாம்
குனிந்தே பார்த்து
மூத்திருக்கும் தங்கிளையின் முதுகிருக்கும் சிறுபறவை
முயங்கித் தம்மில்
யாத்திருக்கும் பாட்டமுதைக் கேட்டசையும்
சிறுகாற்றில், அன்னம் போலே! (13)

ஆண்டெல்லாம் சுவடிபல கைதூக்கிக் கல்வி பயில்
அமைதிக் கூடம்
ஈண்டெம்மைத் தேர்வென்னும் இருங்களத்தே
இருத்தியபின், இன்பம் கூடத்

தூண்டியபின் போகென்றே துரத்தியதால் விடுதலையும்
தோற்றுக் கொண்டேம்;
காண்டகைய இளவேனில் தெய்வம்' என
மாணவர்கள் கையெடுப்பார்! (14)

'அலைவீசுங் கடல்கடந்து பொருள்தேடி
முன்னாளில், அத்தான் சென்றார்;
கலைபயின்றே தந்தொழிலின் நிலைபயின்றே
கைநிறையக் காணஞ் சேர்த்தே
உலைபயிலுந் தீயெனவே ஓராண்டாய் அன்புத்தீ
உறவில் வாடி
நிலையழிந்தேன் எனைத்தழுவ வழிதந்தாய், எனப்பெண்டிர்
நின்னைச் சொல்வார்! (15)

'எழில்வடிவாய் உலகமிங்கே இருப்பதனால்
இருக்கின்றேன்; இன்பங் கொஞ்சும்
பொழில்முழுதும் புதுமைமணம்! புதிய நிறம்!
புதுக்கனிகள்! பொலியச் செய்த
எழிலிக்கு மண்மகளின் காணிக்கைப் பொருளிவைதாம்;
இந்தப் பாரில்
பொழிலுக்கும் நன்றிமற வாச்செயல்தான்
நன்றென்றே. புலவர் சொல்வார்! (16)

'பார்க்கின்ற மலருடும் நீயன்றோ,
திருக்காட்சி பரவி நிற்பாய்!
ஆர்க்கின்ற வண்டொலியில், மென்காற்றில்,
அந்தளிரில், அழகுப் பொய்கை
வேர்க்கொண்ட தாமரையில், விளங்குகுயில்
இன்பாட்டில் விளங்கு கின்ற
கார்க்கொடையே! பரம்பொருளே!' எனப்பரவும்
ஞானியரும் கனிய வந்தாய்! (17)

வேனிலெனப் பெயர்பெற்ற விண்ணமுதே !
மண்மகட்கு விளங்க வாய்த்த
தேனிலவே ! காமனுக்கே ஆட்சி செயத்
திறம்புரிந்த திண்மைச் சேயே !
பானிலவாங் குடைபிடித்துப் பன்மலர்கள்
தமைச்சூடிப் பரிவி னோடே,
'நானிருக்கத் தளராதீர்' என்றமொழிப் பண்பாடி
நடந்து வந்தாய் ! (18)

நின்னையிரு கூறாக்கித் தமிழுலகம் பாடுவதை
நினைகு வேனோ ?
அன்னையெனத் தழுவியருட் பார்வைதரும் இளமையதை
அறைகு வேனோ ?
பின்னுமுளத் திண்மைபெற முதுமையெனத் திறந்தரலைப்
பேசு கேனோ ?
என்னிதயத் தொட்டியநின் எழிலனங்கள்
எவ்வுரையால் இயம்புகேனே. (19)

காற்றாலே தாலாட்டிக் கனியாலே உணவூட்டிக்
கவிதை யென்னும்
ஊற்றாலே உணர்வூட்டி உறுமலராற் சுவையூட்டி
ஒளியார் திங்கட்
கீற்றாலே அமுதூட்டிக் கேட்டாலே உளமினிக்குங்
கிளர்ச்சி யூட்டி,
மாற்றாலே பெறவியலா இன்பூட்டும்
வேனில், நீ மன்னி வாழ்க ! (20)

# செய்திகள்

தருமையாதீனத்தில் :

## திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் 23—4—68 செவ்வாய்க்கிழமையன்று காலையில், திருநாவுக்கரசு சுவாமிகளின் திருநக்ஷத்திரமாகிய சதயத்திருநாளை முன்னிட்டு திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள்.

இரவு பண்ணிசைவாணர்களின் பண்ணிசைப் பாராயணத்துடன் சிவிகையில் திருவீதியுலா நிகழ்ந்தது. வீதியுலாவில், வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களாலும், வித்துவான். திரு. வி. சா, குருசாமி தேசிகர், வித்துவான். திரு. சொ. சிங்காரவேலனார், M. A. Dip-Ling. மகாவித்துவான், திரு. சி அருணைவடிவேல் முதலியார், வித்துவான், சிரோமணி. திரு. வி. சபேசன், திரு. ஆர். வேலாயுத ஓதுவார் முதலியவர்களாலும், அற்புதவிளக்க விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

வேளூரில் :

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் வேளூர் (வைத்தீஸ்வரன்கோயில்) ஸ்ரீ வைத்தியநாதசுவாமி ஆலயத்திற்குத் தென்மேற்கில் கோதண்ட தீர்த்தத்தின் ஈசான திக்கில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பெற்று, 3—5—68 வெள்ளிக்கிழமை காலை அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. அன்பர்கள் பலர் வந்து தரிசித்து உய்ந்தனர்.

**சீகாழியில் :**

## பிரமோற்சவமும் திருமுறைமாநாடும்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமிக்குப் பிரமோற்சவம் 1-5-68 முதல் 10-5 68 முடிய உள்ள நாட்களில் நடைபெற்றது. 1—5—68 அன்று கொடியேற்றமும், 2—5—68 அன்று திருமுலைப்பால் விழாவும், 5—5—68 அன்று இடபவாகனக்காட்சியும், 6—5—68 அன்று திருக்கல்யாணமும், 8, 9—5—68 ஆகிய நாட்களில் திருத்தேர்ப் பெருவிழாவும், 10—5—68 அன்று தீர்த்தம் கொடுத்தலும் நிகழ்ந்தன. விழா நாட்களில் விசேஷ நாதஸ்வர இன்னிசை நிகழ்ச்சிகளும், திருமுறை மாநாடும் நடைபெற்றன. திருமுலைப் பால் விழா அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளினார்கள். திருஞானசம்பந்தர் புறப்பாட்டின் போது திருமுறைப்பணி செய்பவரைச் சிறப்பிக்கும் முறையில் காஞ்சிபுரம் திரு. சாரங்கபாணி செட்டியார் அவர்களுக்கு "திருமுறைக் கலாநிதி" என்னும் பட்டம் வழங்கி ஆசியருளி அற்புத விளக்க விரிவுரையைத் தொடங்கியருளினார்கள். பின்னர், அற்புத விளக்க விரிவுரைகள் நிகழ்த்தப்பெற்றன.

வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் தஞ்சை இந்து சமய அறநிலையத்துறைத் துணை ஆணையர் திரு. T. N. சிங்காரவேல் B. A., B. L., தருமையாதீனப்புலவர் சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான், திரு. சி அருணைவடிவேல் முதலியார், திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர், செஞ்சொற்கொண்டல், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip-Ling., முதலியவர்கள் அற்புத விளக்க விரிவுரையாற்றினார்கள்.

விழா நாட்களில் மாலையில் திருமுறை மாநாடு நிகழ்ந்தது. 2—5—68 வியாழக்கிழமை திருஞானசம்பந்தர் திருநாளாக அமைக்கப்பெற்றிருந்தது. அன்று வித்துவான், ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "ஞானத் தமிழ்" என்ற தலைப்பிலும், திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் "நாலெழுத்து" என்ற தலைப்பிலும், தருமையாதீனப்புலவர், பண்டித வித்துவான் திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை "பன்னிருநாமம் படைத்த

பெற்றி'' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். பின்னர், தேவார இசைமணி, சங்கீதபூஷணம், திரு. P. சுவாமிநாதன் குழுவினரின் பண்ணிசை யரங்கு நிகழ்த்தப்பெற்றது.

3—5—68 வெள்ளிக்கிழமை திருநாவுக்கரசர் திருநாளாக அமைக்கப்பெற்றிருந்தது. அன்று சித்தாந்தப் புலவர்மணி, புலவர் திரு ந. ரா. முருகவேள் M. A., M. O. L., ''அப்பர் அருந்தமிழ்'' என்ற பொருளிலும், தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வை. குஞ்சிதபாதம் பிள்ளை ''அப்பர் விருந்து'' என்ற பொருளிலும், வித்துவான், திருமதி. ப. நீலா ''அப்பரும் சம்பந்தரும்'' என்ற பொருளிலும் சொற்பெருக்காற்றினர். பின்னர் வேலூர், திரு K. குணபூஷணம் குழுவினரின் கதா காலக்ஷேபம் நிகழ்ந்தது.

4—5—68 சனிக்கிழமை சுந்தரர் திருநாளாக அமைந்தது. அன்று தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை ''சுந்தரர் செந்தமிழ்'' என்ற தலைப்பிலும், திருப்பனந்தாள். வித்துவான் திரு. மு சுந்தரேசம்பிள்ளை ''தம்பிரான் தோழர்'' என்ற தலைப்பிலும், சிரோமணி, வித்துவான், திரு. வி. சபேசன் ''சுந்தரரும் சேரமான்பெருமாளும்'' என்ற தலைப்பிலும், விரிவுரையாற்றினர். அடுத்து திரு. M. சுப்பிரமணிய முதலியார் குழுவினரின் பண்ணிசை யரங்குடன் அன்றைய நிகழ்ச்சி நிறைவுற்றது.

5—5—68 ஞாயிற்றுக்கிழமை மாணிக்கவாசகர் திருநாளாக அமைந்தது. அன்று வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் ''திருச்சதகம்'' என்ற பொருளிலும், திரு. முத்து. இராசாக்கண்ணனார் M. A., B.O.L., ''திருவாசகம்'' என்ற பொருளிலும், சிதம்பரம் திருமதி. இராஜேஸ்வரி சுவாமிநாதன் '' மணிவார்த்தை '' என்ற பொருளிலும் பேருரையாற்றினர். பின்னர் மாணிக்கவாசகர் வரலாற்றுக் கதா காலக்ஷேபம் தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வை. மு. சண்முக தேசிகர் குழுவினரால் நிகழ்த்தப்பட்டது.

6—5—68 திங்கட்கிழமை திருமாளிகைத்தேவர் முதலியோர் திருநாளாக அமைந்திருந்தது அன்று வித்துவான், ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் ''திருமாளிகைத்தேவர்'' என்ற தலைப்பிலும், தருமையாதீனப்புலவர், மகாவித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் ''கருவூர்த்தேவர்'' என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை

"சேந்தனர்" என்ற தலைப்பிலும், கயப்பாக்கம், திரு. சோம சுந்தரம் செட்டியார் "கண்டராதித்தர்" என்ற தலைப்பிலும் சொற்பெருக்காற்றினர். பின்னர் தேவார இசைமணி, திரு. S. திருஞானசம்பந்தம் (சீகாழி தேவஸ்தானம்) & திரு. து. சோம சுந்தர தேசிகர் (திருவாவடுதுறை) இவர்களால் தேவாரப் பண்ணிசையரங்கு நிகழ்த்தப்பெற்றது.

7—5—68 செவ்வாய்க்கிழமை அன்று சிறப்பு நிகழ்ச்சியாக திருமுறை வீதியுலாவும் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் மாலை 5-மணியளவில் நிகழ்ந்தன. திருமுறைப் பாராயணத்துடன் யானைமீது திருமுறைத் திருவீதி உலாக்காட்சி நடைபெற்றது. பின்னர் வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரை கூறினர்கள். அடுத்து வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "பெரியபுராணம்" என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றி தேவார வகுப்பு மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்கள். பின்னர், தருமையாதீனப் புலவர், சித்தாந்தசிகாமணி. திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி., "தொண்டர் சீர்பரவுவார்" என்ற தலைப்பிலும், திருவதிகை திரு. ரா. சண்முக சுந்தரம் செட்டியார் "தெய்வத்தமிழ்" என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. பாலூர் கண்ணப்ப முதலியார் "சேக்கிழார் ஒரு பல்கலைக் குரிசில்" என்ற தலைப்பிலும் பேருரையாற்றினர். அடுத்து சென்னை, திரு. B. R. இராஜகோபாலன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியுடன் திருமுறை மாநாடு நிறைவுற்றது. நாள்தோறும் அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

திருக்கடவூரில் :

## சித்திரைத் திருவிழா

தருமையாதீனம் திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத் திருவிழா 1—5—68 புதன்கிழமை முதல் தொடங்கி 10—5—68 வெள்ளிக்கிழமை முடிய நடைபெற்றது. 6—5—68 அன்று காலசம்காரத் திருநாள். அன்று நண்பகல் சம்காரமூர்த்திக்கு சிறந்த முறையில் அபிஷேகம் நடைபெற்றது. அன்று மாலை காலசம்காரத் திருவிழா சிறப்புற நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

நாள்தோறும் மாலை 6-மணி முதல் சமயச் சொற்பொழிவுகள் தொடங்கி நடைபெற்றன.

2—5—68 வியாழக்கிழமை வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் "திருவடிப் பெருமை" என்ற தலைப்பிலும், 3—5—68 வெள்ளிக்கிழமை திருநெறிச்செம்மல், வித்துவான், திரு. சா. குருசாமி தேசிகர் "மார்க்கண்டேயர்" என்ற தலைப்பிலும், 4—5—68 சனிக்கிழமை வித்துவான், திருமதி. ப. நீலா "அபிராமி பட்டர்" என்ற தலைப்பிலும், 5—5—68 ஞாயிற்றுக்கிழமை தருமையாதீனப்புலவர், சித்தாந்தக்கலைமணி. மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "உய்யவந்ததேவ நாயனார்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

6-5-68 திங்கட்கிழமை தருமையாதீனப்புலவர், வித்துவான், திரு. வை, மு. சண்முக தேசிகர் "குங்குலியக்கலய நாயனார்" வரலாற்றைக் கதாகால க்ஷேபமாக நிகழ்த்தினார்கள். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

**திருவையாற்றில்:**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானத்தில் சித்திரைத்திருவிழா 1—5—68 புதன்கிழமை முதல் தொடங்கி 10—5—68 வெள்ளிக்கிழமை முடிய உள்ள நாட்களில் மிக்க சிறப்பாக நிகழ்ந்தது. 1—5—68 அன்று துவஜாரோகணமும், 5—5—68 அன்று பெருமான் தன்னைத்தான் பூஜித்தலும், இடப வாகனக்காட்சியும், ஆறு ஊர் சுவாமிகள் எழுந்தருளலும், 7—5—68 அன்று கோரதக்காட்சியும், 9—5—68 அன்று திருத்தேர்த்திருவிழாவும், 10—5—68 அன்று தீர்த்தம் கொடுத்தருளலும், துவஜாவரோகணமும் நிகழ்ந்தன,

12—5—68 அன்று சப்தஸ்தானம் ஏழூர்வலம் வருதல், இது இத்தலத்தில் நிகழும் சிறப்புத் திருவிழா. விழா நாட்களில் விசேஷ நாதஸ்வர இன்னிசை முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளும், சமயச் சொற்பொழிவுகளும் சிறப்பாக நடைபெற்றன.

பிரசங்க மண்டபத்தில் நாள்தோறும் மாலை 6-மணிமுதல் சொற்பொழிவுகள் தொடங்கி நடைபெற்றன.

2-5-68 வியாழக்கிழமை தருமையாதீனப்புலவர், வித்துவான் திரு. வை. மு. சண்முக தேசிகர் அவர்களால் "கண்ணப்பர்" வரலாறு கதாகாலக்ஷேபமாக நிகழ்த்தப்பட்டது.

3—5—68 வெள்ளிக்கிழமை செஞ்சொற்கொண்டல், திரு. சொ. சிங்காரவேலனார் எம். ஏ., "களிறு வருவன கண்டேன்"

என்ற தலைப்பிலும், 4—5—68 சனிக்கிழமை தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக்கலைமணி, மகாவித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "ஓதியஞானமும் ஞானப் பொருளும்" என்ற தலைப்பிலும், 5—5—68 ஞாயிற்றுக்கிழமை வித்துவான், திருமதி. ப. நீலா "ஐயாறன் அடித்தலமும் பெருஞ் செல்வமும்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற் றினர். அன்பர்கள் பலர் வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

---

## கடிதம்

வேலுமயிலுந்துணை

சிவசண்முக மெய்ஞ்ஞான தேசிகன் திருவடி வாழ்க

சென்னை - 2,
7—5—'68.

அருட்கடலாய் எழுந்தருளும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத் தின் முன் வணங்கி எழுதுவது,

அருளார் அமிழ்தக் கடலே!

மகாசந்நிதானம் அவர்களைக் காணவும் முன் இருக்கவும் அருளிய சீரிய அன்பு மொழிகளைக் கேட்கவுமாக அமைந்த 5...5...68 ஆம் நாளினை என் வாழ்வில் ஒரு மறக்க முடியாத சிறந்த தெய்வத் திருநாளாகக் கருதுகிறேன். உலகச் செயல் களாகிய அலைகளிடை மொத்துண்டு வதையுண்டு தள்ளுண்டு வாழும் இவ்வாழ்விடையில் இறைபரம்பொருளின் நிறை உணர் வும் அவ்வுணர்வின் வழிச்செயலும் கொண்டு அவ்விறைவனுகவே இம்மண்ணில் எழுந்தருளும் தயாநிதியாகிய குருமகா சந்நிதானத்தின் நல்லாசிக்குரிய அந்நாளினை என்றும் மறவேன்.

பிறந்த பிறவியின் பயனைப் பெறுதற்கு மகாசந்நிதானத்தின் பேரருள் முன் நிற்க வேண்டும் எனப் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
குருமகாசந்நிதானத்தின் திருவருள்
வேண்டும் அன்பன்,
முத்து. இராசாக்கண்ணனார்.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( கீலகஞூ வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய )

(14—5—68 முதல் 13—6—68 முடிய)

வைகாசிமீ 13ம் தேதி பிற்பகல் முதல் 14ம் தேதி காலை 10 நாழிகை வரை விருஷபராசியில் அமாவாசையன்று சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், சுக்கிரன் ஆகிய ஐந்து கிரகங்களின் சேர்க்கை ஏற்படுகிறது.

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சஞ்சாரம் அதிகரிக்கும். ஜீவனம ஓங்கும். குடும்பத் தொல்லைகளும் அதிக விரயமும் ஏற்படச்செய்யும். அனுவசிய விரோதங்களையும் தரும். மாதக் கடைசியில் எல்லாம் சுபமாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

விருஷபராசியில் கூடகிரகச் சேர்க்கை ஏற்படுவதால் இயற்கைக் கோளாறுகள் ஏற்பட்டு அன்றுட வாழ்க்கைக்கு விரோதம் உண்டுபண்ணும். சகல காரியங்களும் தவக்கமாகும். வீண் செலவுகளும் மனஸ்தாபமும் காட்டும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி ஒன்பது பாதங்களும் சுபமாகும். நஷ்டதனம் தானாக வந்துசேரும். குடும்பம் ஓங்கும். ஜீவன லாபம் ஏற்படும். சுப சோபனுதிகள் ஏற்படும். புத்திராதிகளால் சுபமுண்டாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி ஒன்பது பாதங்களும் எதிர்பாராத சுகபோகங்களை உண்டுபண்ணும். மேலோர் பெரியோர் சேர்க்கையால் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். கீர்த்திப்பத்திரம் கிடைக்கும்.

வியவசாயம் ஓங்கும். நூதனமான முறைகளால் தொழில் ஏற்றம் ஏற்படும். வியவகாரம் ஜயிக்கும். ஆரோக்கியம் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி ஒன்பது பாதங்களும் மிச்சிர பலனைத்தரும். அதிக விரயத்தால் சகலமும் சாத்தியமாகும். நினைத்தக்காரியங்கள் தவக்கத்தோடு நடைபெறும். ஜீவனம் ஓங்கும். இல்லற சுகம் உண்டுபண்ணும். நஷ்டதனம் கொஞ்சம் கொஞ்சமாக வந்துசேரும். புதன், வியாழன் சுபமாகும்.

## 6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி ஒன்பது பாதங்களும் சுபமேயாகும். ஆரோக்கியம் தரும். உலகத்தில் மகத்தான கீர்த்தியை உண்டுபண்ணும். தெய்வசக்தியால் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். சுபசோபனுதிகள் ஏற்படும். நூதனமான முறையால் வியவசாயம் ஓங்கும். சாதுசங்கமும் தர்ம பிரதிஷ்டையும் ஏற்படச்செய்யும். நூதனமாக ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி ஒன்பது பாதங்களும் அதிக உழைப்பால் அதிக பலனைத்தரும். உலகத்தில் மகத்தான கீர்த்தியை உண்டு பண்ணும். ரிணநிவர்த்தியாகும். கிரக சுகம் ஓங்கும். தெய்வ சக்தி நேரில் பிரகாசிக்கும். நூதன பிரபு தரிசனம் ஏற்படும். மங்கள காரியங்களால் அதிக விரயம் ஏற்படச்செய்யும். குடும்ப சுகம் நீடிக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி ஒன்பது பாதங்களும் சுபமாகும். இல்லறம் ஓங்கும். தொழில் ஏற்றம் ஏற்படும். மேலோர் பெரியோர்களால் நன்மை ஏற்படும். ஆரோக்கியம் உண்டாகும். கிரக சுகம் நீடிக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரபலனைத்தரும். சுபங்கள் ஏற்படும். அடிக்கடி சஞ்சார பலன் கிடைக்கும்.

தேவதாகுரு தரிசனங்களும் தர்மப்பிரவிருத்தியும் அதிகமாகும். வியவசாயம் ஓங்கும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரபலனைத்தரும். அதிக உழைப்பால் தொழில் ஓங்கும். மேலோர் பெரியோர்களால் நன்மை உண்டாகும். கீர்த்திப் பத்திரம் கிடைக்கும். ஆரோக்கியம் தரும். குடும்பம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி ஒன்பது பாதங்களும் மிச்சிரபலனைத்தரும். குடும்பத் தொல்லைகளும் அதிக விரயமும் ஏற்படும். ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் சேரும். புத்திராதிகளால் சுபம் ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி ஒன்பது பாதங்களும் சுபமேயாகும். இராஜாங்க மைத்திரமும் மேலோர் பெரியோர் அன்பும் ஏற்படச்செய்யும். ஆரோக்கியம் தரும். கீர்த்திப் பத்திரம் கிடைக்கும். தெய்வ சக்தி பிரகாசிக்கும். தொழில் ஏற்றம் ஏற்படும். மனம் சாந்தியடையும்: புத்திராதிகளால் சுபமுண்டாகும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி மாதத்திலும் விருஷப இராசியில் அமாவாசை அன்று ஐந்து கிரகங்கள் சேர்ந்து சனி பார்வையும் ஏற்பட்டபடியால் இயற்கைகள் நேர் மாருக நடக்கும், அமைதியிராது. ஜனங்களுக்கு அதிகமான பேராசை ஏற்படும். எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற புத்தியால் உலகம் தடுமாறும். இனி தர்மபுத்தியில்லாமலும் தன் இஷ்டப்படி நடத்தலும் இருந்தால் நடுத்தர வகுப்பார்களும் சாதுக்களும் ஜீவிக்க முடியாது. ஆகையால் கடவுளை நம்பின பிரபு ஜனங்களும் ஆஸ்தீக புத்தியோடு கூடின உலகநிர்வாகமும் சேர்ந்து கொண்டு வேதம், ஆகமம், ஜோதிஷம், தர்ம சாஸ்திரம், பெரியோர்களின் வாக்கு இவைகளைக் காப்பாற்றிவந்தால் உலகம் முன்னேற்றமடையும், கடவுள் கருணையோடு காப்பார். சுபமுண்டாகும்.